*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: **CC.202/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW-1 (LW-1)***

*Name / Father's Name: **திருமதி.விமலா க/பெ. பெரியசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25.09.2025.**

துவக்க நேரம் 12.55 A.N

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டத்தில் உள்ள மலையாளப்பட்டியில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள், எனது கணவர், மாமியார், மாமனார் மற்றும் கணவரின் உறவினர்கள் ஆவார்கள்.

2) கடந்த 08.06.2016 அன்று எனக்கும், எனது கணவர் பெரியசாமிக்கும் பெரியவர்களால் பேசி திருமணம் செய்துவைக்கப்பட்டது. பின்னிட்டு ஒரு வருட காலம் நானும், எனது கணவர் பெரியசாமியும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தோம். அதன் பயனாக எனக்கு ஒரு குழந்தை பிறந்தது.

3) அதற்கு பின்னிட்டு எனது கணவருக்கும், எனக்கும் இடையே அடிக்கடி கருத்துவேறுபாடு ஏற்பட்டு சண்டை சச்சரவுகள் நடக்கும். அதை நான், எனது மாமனார், மாமியாரிடமும், எனது கணவரின் உறவினர்களிடமும் தெரிவித்தேன். எனது கணவருக்கு அறிவுரை கூறாமல், என்னிடம்தான் அறிவுரை கூறினார்கள்.

4) அதனால் எனது கணவரின் குடும்பத்தாரிடமிருந்து ஒரு சுமூகமான வாழ்க்கை வாழமுடியவில்லை. அதற்கு பின்னிட்டு நான் எனது கணவரிடமிருந்து பிரிந்து வாழ்ந்து வந்தேன். எனது கணவர், வேறொரு திருமணம் செய்துகொண்டாரா என்று எனக்கு தெரியாது. அதனால்தான் எனது கணவர் மற்றும் கணவரின் உறவினர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் நீதிமன்றத்தில் முறையீடு செய்து, நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

5) தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் மனுவில் உள்ள புகார்தாரர் கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அந்த புகார் மனுவில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார், என்னிடம் நடந்த சம்பவத்தை குறித்து விசாரணை செய்தார்கள். நான் தற்பொழுது நீதிமன்றத்தில் சொன்னதைத்தான் அப்பொழுதும் சொன்னேன்.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

1) ஆஜர் எதிரி பெரியசாமி, எனது கணவர் என்றால் சரிதான். 2ம் எதிரி மாணிக்கம், 3ம் எதிரி மல்லிகா ஆகியோர்கள் எனது மாமனார், மாமியார் ஆவார்கள். மற்ற எதிரிகள் எனது கணவரின் உறவினர்கள் ஆவார்கள். எனது கணவருடன் நான் எத்தனை வருடங்களாக சேர்ந்து வாழ்ந்து வந்தேன் என்றால் ஒரு வருடம்தான் வாழ்ந்தேன்.

2) கடந்த 08.06.2016 அன்று எனக்கும், எனது கணவருக்கும் ஆறகளூரில் உள்ள ஈஸ்வரன் கோவிலில் திருமணம் நடந்ததாகவும், திருமணத்திற்காக எனது பெற்றோர்கள் எனக்கு 25 பவுன் நகையும், எனது கணவருக்கு 5 பவுன் தங்கசெயினும் மற்றும் வீட்டிற்கு தேவையான சுமார் 1–1/2 இலட்சம் மதிப்புள்ள வீட்டு உபயோகப்பொருட்களை சீர்வரிசையாக கொடுத்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

3) இந்நிலையில் எனது தாயாரின் உடல்நிலை சரியில்லை என்று நான், எனது தாயாரை பார்க்க சென்றபொழுது எனது மாமனாரும், மாமியாரும், என் மீது, எனது கணவருக்கு தவறான எண்ணம் தோன்றுமாறு பேசி, அதனால் எனது கணவர், என்னை அடித்து துன்புறுத்தி, வரதட்சணை கேட்டு கொடுமை செய்ததாகவும், இதை எனது பெற்றோர்களிடம் நான் சொன்னதாகவும், அதை கேட்க வந்த எனது அம்மாவையும், தம்பியையும், எனது கணவர் திட்டி, கட்டையால் அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவும், அதனால் மனகருத்துவேறுபாடு ஏற்பட்டு நானும், எனது கணவரும் பிரிந்து வாழ்ந்துவந்த நிலையில், எனது கணவர், எனது கணவரின் உறவினர்கள் மற்றும் எனது பெற்றோர்கள் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமரசம் பேசி சேர்த்துவைத்தார்கள் என்றும், அதற்கு பின்னிட்டு எனக்கு நேரத்திற்கு உணவு கொடுக்காமல் கொடுமைகள் செய்து வந்ததால், நான் எனது குழந்தையுடன், எனது கணவரிடமிருந்து பிரிந்து வாழ்ந்து வந்தேன் என்றும், அப்பொழுது எனது கணவர், பிரியா என்ற பெண்ணை திருமணம் செய்து, வாழ்ந்து வருவதாக நான் கேள்விபட்டதாகவும், அதற்கு பின்னிட்டு பிரியாவை அழைத்து நான் விசாரித்தபொழுது பிரியா, எனது கணவரின் வீட்டில் வேலை செய்து வருவதாக என்னிடம் கூறியதாகவும், அதனால் நான், எனது கணவரின் மீதும், எனது கணவரின் உறவினர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கக்கோரி காவல் நிலையத்திலும், நீதிமன்றத்திலும் புகார் கொடுத்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்பொழுது எதிரிகள் எனது கணவர், மாமனார், மாமியார் மற்றும்

எனது கணவரின் உறவினர்கள் என்பதால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சமரச மனு என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(சமரச மனு அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) திருமணத்திற்கு பிறகு எனக்கும், எனது கணவருக்கும் மனகசப்பு ஏற்பட்ட பிறகு நானும், எனது கணவரும் பிரிந்து வாழ்ந்து வந்த பொழுது, நான், எனது கணவரிடமிருந்து ஜீவனாம்சம் கோரி எனக்காகவும், எனது குழந்தை தேனினியன் என்பவருக்காகவும் இதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தேனா என்றால் ஆமாம்.

2) எனது கணவர், எனக்கெதிராக ஆத்தூர், சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்திருந்தாரா என்றால் ஆமாம். என் கணவர், எனக்கெதிராக கொடுத்த புகாரின் பேரில் மாண்பமை சென்னை, உயர் நீதிமன்றத்தில் என் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை நீக்கறவு செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனுவில் கோரப்பட்ட பரிகாரத்தின் பேரில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் குறிப்பிடபட்டப்படி எனக்கும், என் மைனர் குழந்தைக்கும் சேர்த்து ஜீவனாம்சமாக ரூ.10,50,000/- பணம் பெற்றுக்கொண்டோமா என்றால் ஆமாம்.

3) மேலும் எங்களுக்கிடையேயான வழக்குகளை சமரசமாக முடித்துக்கொள்ளுமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, இந்த வழக்கினை தவிர மற்ற வழக்குகள் அனைத்தையும் சமரசம் செய்துகொண்டு, வழக்குகள் முடிக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரிதான்.

முடிவு நேரம் 01.20 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.09.25 17:42:22 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.202/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-2)***

*Name / Father's Name:* ***திருமதி.லட்சுமி க/பெ. செல்வராஜ்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25.09.2025.**

துவக்க நேரம் 01.21 A.N

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டத்தில் உள்ள மலையாளப்பட்டியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி விமலா, எனது மகள் ஆவார். ஆஜர் எதிரிகள், எனது மருமகன், எனது மகளின் மாமியார், மாமனார் மற்றும் எனது மருமகனின் உறவினர்கள் ஆவார்கள்.

2) கடந்த 08.06.2016 அன்று எனது மகளுக்கும், எனது மருமகன் பெரியசாமிக்கும் பெரியவர்களால் பேசி திருமணம் செய்துவைத்தோம். பின்னிட்டு ஒரு வருட காலம் மட்டும் எனது மகளும், எனது மருமகன் பெரியசாமியும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். அதன் பயனாக அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

3) அதற்கு பின்னிட்டு எனது மருமகனுக்கும், எனது மகளுக்கும் இடையே அடிக்கடி கருத்துவேறுபாடு ஏற்பட்டு சண்டை சச்சரவுகள் நடந்துள்ளது. அதை எனது மகள், அவரது மாமனார், மாமியாரிடமும், அவரது கணவரின் உறவினர்களிடமும் தெரிவித்துள்ளார். அதற்கு அவர்கள் எனது

மருமகனுக்கு அறிவுரை கூறாமல், எனது மகளுக்கு அறிவுரை கூறியதாக எனது மகள், என்னிடம் கூறினார்.

4) அதனால் எனது மகள், அவரது கணவரின் குடும்பத்தில் ஒரு சுமூகமான வாழ்க்கை வாழமுடியவில்லை. அதற்கு பின்னிட்டு எனது மகள், எனது மருமகனிடமிருந்து பிரிந்து வாழ்ந்து வந்தார். எனது மருமகன், வேறொரு திருமணம் செய்துகொண்டாரா என்று எங்களுக்கு தெரியாது. அதனால் எனது மருமகன் மற்றும் எனது மருமகனின் உறவினர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி காவல் நிலையத்தில் எனது மகள், புகார் கொடுத்தார். காவல் நிலையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் நீதிமன்றத்தில் முறையீடு செய்து, நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. போலிசார், என்னிடம் நடந்த சம்பவத்தை குறித்து விசாரணை செய்தார்கள். நான் தற்பொழுது நீதிமன்றத்தில் சொன்னதைத்தான் அப்பொழுதும் சொன்னேன்.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

1) ஆஜர் எதிரி பெரியசாமி, எனது மருமகன் என்றால் சரிதான். 2ம் எதிரி மாணிக்கம், 3ம் எதிரி மல்லிகா ஆகியோர்கள் எனது சம்மந்தி ஆவார்கள். மற்ற எதிரிகள் எனது மருமகனின் உறவினர்கள் ஆவார்கள். எனது மகள், அவரது கணவருடன் எத்தனை வருடங்களாக சேர்ந்து வாழ்ந்து வந்தார் என்றால் ஒரு வருடம்தான் வாழ்ந்தார்.

2) கடந்த 08.06.2016 அன்று எனது மகளுக்கும், எனது மருமகனுக்கும் ஆறகளூரில் உள்ள ஈஸ்வரன் கோவிலில் திருமணம் நடந்தபொழுது, நான், எனது மகளுக்கு 25 பவுன் நகையும், எனது மருமகனுக்கு 5 பவுன் தங்கசெயினும் மற்றும் வீட்டிற்கு தேவையான சுமார் 1–1/2 இலட்சம் மதிப்புள்ள வீட்டு உபயோகப்பொருட்களை சீர்வரிசையாக கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான்.

3) இந்நிலையில் எனது உடல்நிலை சரியில்லை என்பதால், எனது மகள் என்னை பார்க்க வந்த பொழுது எனது மகளின் மாமனாரும், மாமியாரும், என் மகள் மீது, அவரது கணவருக்கு தவறான எண்ணம் தோன்றுமாறு பேசி, அதனால் அவரது கணவர், எனது மகளை அடித்து துன்புறுத்தி, வரதட்சணை கேட்டு கொடுமை செய்ததாகவும், இதை எனது மகள், எங்களிடம் சொன்னதாகவும், அதை கேட்க சென்ற என்னையும், எனது மகனையும், எனது மருமகன் திட்டி, கட்டையால் எங்களை அடித்து காயத்தை ஏற்படுத்தி, எங்களுக்கு கொலைமிரட்டல் விடுத்ததாகவும், அதனால் மனகருத்துவேறுபாடு ஏற்பட்டு எனது மகளும், எனது மருமகனும் பிரிந்து வாழ்ந்துவந்த நிலையில், எனது மருமகன், எனது மருமகனின் உறவினர்கள் மற்றும் நாங்களும், ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமரசம் பேசி அவர்களை சேர்த்துவைத்தோம் என்றும், அதற்கு பின்னிட்டு எனது மகளுக்கு நேரத்திற்கு உணவு கொடுக்காமல், எனது மருமகன் வீட்டில் கொடுமைகள் செய்து வந்ததால், எனது மகள், எனது பேரனுடன், அவரது கணவரிடமிருந்து பிரிந்து வாழ்ந்து வந்தார் என்றும், அப்பொழுது எனது மருமகன், பிரியா என்ற பெண்ணை திருமணம் செய்து, வாழ்ந்து வருவதாக நாங்கள் கேள்விபட்டதாகவும், அதற்கு பின்னிட்டு பிரியாவை அழைத்து நாங்கள் விசாரித்தபொழுது பிரியா, எனது மருமகனின் வீட்டில் வேலை செய்து வருவதாக எங்களிடம் கூறியதாகவும், மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி நான், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்பொழுது எதிரிகள் எனது மருமகன், எனது சம்மந்திகள், மற்றும் எனது

மருமகனின் உறவினர்கள் என்பதால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சமரச மனு எங்களால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் உள்ள 2 வது கைரேகை என்னுடையதுதான்.

முடிவு நேரம் 01.42 A.N

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.09.25 17:42:35 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.202/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-3)***

*Name / Father's Name:* ***திரு.விக்னேஷ் த/பெ. செல்வராஜ்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25.09.2025.**

துவக்க நேரம் 01.43 A.N

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டத்தில் உள்ள மலையாளப்பட்டியில் குடியிருந்து, டிரைவராக வேலை செய்து வருகிறேன். சாட்சி விமலா, எனது அக்கா ஆவார். அ.சா.2 இலட்சுமி, எனது அம்மா. ஆஜர் எதிரிகள், எனது அக்காவின் கணவர், மாமியார், மாமனார் மற்றும் எனது அக்காவின் கணவரின் உறவினர்கள் ஆவார்கள்.

2) கடந்த 08.06.2016 அன்று எனது அக்காவிற்கும், எனது மாமா பெரியசாமிக்கும் பெரியவர்களால் பேசி திருமணம் செய்துவைக்கப்பட்டது. பின்னிட்டு ஒரு வருட காலம் எனது அக்காவும், எனது மாமா பெரியசாமியும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். அதன் பயனாக அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது.

3) அதற்கு பின்னிட்டு எனது மாமாவிற்கும், எனது அக்காவிற்கும் இடையே அடிக்கடி கருத்துவேறுபாடு ஏற்பட்டு சண்டை சச்சரவுகள் நடக்கும். அதை எனது அக்கா, அவரது மாமனார், மாமியாரிடமும், அவரது கணவரின் உறவினர்களிடமும் தெரிவித்துள்ளார். அதற்கு அவர்கள் எனது அக்காவின்

கணவருக்கு அறிவுரை கூறாமல், எனது அக்காவிற்கு அறிவுரை கூறியுள்ளார்கள்.

4) அதனால் எனது மாமாவின் குடும்பத்தில் ஒரு சுமூகமான வாழ்க்கையை எனது அக்காவால் வாழமுடியவில்லை. அதற்கு பின்னிட்டு எனது அக்கா, எனது மாமாவிடமிருந்து பிரிந்து வாழ்ந்து வந்தார். எனது மாமா, வேறொரு திருமணம் செய்துகொண்டாரா என்று எங்களுக்கு தெரியாது. அதனால்தான் எனது மாமா மற்றும் மாமாவின் உறவினர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி காவல் நிலையத்தில் எனது அக்கா, புகார் கொடுத்தார். காவல் நிலையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்காததால், நீதிமன்றத்தில் முறையீடு செய்து, நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. போலிசார், என்னிடம் நடந்த சம்பவத்தை குறித்து விசாரணை செய்தார்கள். நான் தற்பொழுது நீதிமன்றத்தில் சொன்னதைத்தான் அப்பொழுதும் சொன்னேன்.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

1) ஆஜர் எதிரி பெரியசாமி, எனது மாமா என்றால் சரிதான். 2ம் எதிரி மாணிக்கம், 3ம் எதிரி மல்லிகா ஆகியோர்கள் எனது அக்காவின் மாமனார், மாமியார் ஆவார்கள். மற்ற எதிரிகள் எனது மாமாவின் உறவினர்கள் ஆவார்கள். எனது அக்கா, எனது மாமாவுடன் எத்தனை வருடங்களாக சேர்ந்து வாழ்ந்து வந்தார் என்றால் ஒரு வருடம்தான் வாழ்ந்தார்.

2) கடந்த 08.06.2016 அன்று எனது அக்காவிற்கும், எனது மாமாவிற்கும் ஆறகளுரில் உள்ள ஈஸ்வரன் கோவிலில் திருமணம் நடந்ததாகவும், திருமணத்திற்காக எனது பெற்றோர்கள் எனது அக்காவிற்கு 25 பவுன் நகையும், எனது மாமாவிற்கு 5 பவுன் தங்கசெயினும் மற்றும் வீட்டிற்கு தேவையான சுமார் 1–1/2 இலட்சம் மதிப்புள்ள வீட்டு உபயோகப்பொருட்களை சீர்வரிசையாக கொடுத்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

3) இந்நிலையில் எனது தாயாரின் உடல்நிலை சரியில்லை என்று எனது அக்கா, எனது தாயாரை பார்க்க வந்தபொழுது அவரது மாமனாரும், மாமியாரும், அவர் மீது, அவரது கணவருக்கு தவறான எண்ணம் தோன்றுமாறு பேசி, அதனால் எனது மாமா, எனது அக்காவை அடித்து துன்புறுத்தி, வரதட்சணை கேட்டு கொடுமை செய்ததாகவும், இதை எனது அக்கா, எனது பெற்றோர்களிடம் சொன்னதாகவும், அதை கேட்க வந்த எனது அம்மாவையும், என்னையும், எனது மாமா திட்டி, கட்டையால் எங்களை அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவும், அதனால் மனகருத்துவேறுபாடு ஏற்பட்டு எனது அக்காவும், எனது மாமாவும் பிரிந்து வாழ்ந்துவந்த நிலையில், எனது மாமா, எனது மாமாவின் உறவினர்கள் மற்றும் எனது பெற்றோர்கள் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமரசம் பேசி சேர்த்துவைத்தார்கள் என்றும், அதற்கு பின்னிட்டு எனது அக்காவிற்கு நேரத்திற்கு உணவு கொடுக்காமல் எனது மாமாவின் வீட்டில் கொடுமைகள் செய்து வந்ததால், எனது அக்கா, அவரது குழந்தையுடன், எனது மாமாவைவிட்டு பிரிந்து வாழ்ந்து வந்தார் என்றும், அப்பொழுது எனது மாமா, பிரியா என்ற பெண்ணை திருமணம் செய்து, வாழ்ந்து வருவதாக நான் கேள்விபட்டதாகவும், அதனால் எனது அக்கா, எனது மாமாவின் மீதும், எனது மாமாவின் உறவினர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கக்கோரி காவல் நிலையத்திலும், நீதிமன்றத்திலும் புகார் கொடுத்தார் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்பொழுது எதிரிகள் எனது அக்காவின் கணவர், எனது அக்காவின் மாமனார், மாமியார் மற்றும் எனது மாமாவின் உறவினர்கள்

என்பதால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சமரச மனு எங்களால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் உள்ள 3 வது கையெழுத்து என்னுடையதுதான்.

முடிவு நேரம் 02.06 A.N

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.09.25 17:42:47 +0530

Judicial Magistrate No.2, Attur.